# கொக்குவில் இந்துக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் (கனடா)
**KOKUVIL HINDU COLLEGE**
**OLD STUDENTS ASSOCIATION**
**(CANADA)**
**2019**

## *9 வயதுக்கு உட்பட்டோர் – ஆண் / பெண்*

## பண்ணிசைப் போட்டி

***பின்வரும் தேவாரங்களில் ஒன்றினைதெரிவு செய்து பண்ணுடன் பாடுக.***

*1.* நத்தார்படை ஞானன் பசுவேறிந்நனை கவிழ்வாய்
மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெலும் பணிவான் றிருக்கேதீச்சரத்தானே.

*02.* முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்து பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறிவித்து சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

*03.* பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ